அரசாங்க நிருவாக சுற்றறிக்கை : 02/2021(IV)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3381
பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.08.06

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட நிறுவனங்களின் பிரதானிகள்

## அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்

தற்போது நாட்டில் கொவிட் - 19 வைரஸ் வேகமாகமாகப் பரவுவது தொடர்பிலும் சுகாதார அதிகாரிகள், நிபுணர்கள் போன்ற பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளையும் கவனத்தில் எடுத்து 2021.07.30 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 02/2021(III)ன் 03 மற்றும் 04 ஆம் பந்திகளைத் தவிர ஏனைய ஏற்பாடுகள் பின்வருமாறு திருத்தப்படுவதுடன், அதனடிப்படையில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் அரசாங்க நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைக்கும் போது இந்த திருத்தப்பட்டவாறான ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதல் வேண்டும்.

02. அனைத்து அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை ஒரு உத்தியோகத்தர் ஆகக் குறைந்தது வாரத்தில் 03 நாட்கள் சேவைக்குச் சமுகமளிக்கக் கூடிய விதத்தில் குழுக்காக அமைத்து அக்குழுக்கள் நிறுவனத்தின் சேவையைத் தொடர்ச்சியாக வழங்கக் கூடிய விதத்தில் சேவைக்கு அழைத்தல் வேண்டும்.

03. மேலே குறிப்பிட்டவாறு குழுக்களாக சேவைக்கு அழைக்கும் சந்தர்ப்பத்தில் ஒரு உத்தியோகத்தர் சேவைக்குச் சமுகமளிக்க வேண்டிய ஒரு தினத்தில் சேவைக்குச் சமுகமளிக்காவிட்டால் மாத்திரம் அந்த உத்தியோகத்தரின் தனிப்பட்ட லீவுகளிலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

04. உத்தியோகபூர்வ போக்குவரத்து வசதிகள் அல்லது வாகன குழாத்திலுள்ள வாகனங்கள் மூலம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு மேற்குறித்த சுழற்சிச் சேவை முறை ஏற்புடையதாக மாட்டாது என்பதுடன் அவர்கள் நிறுவனத் தலைவர்களின் தற்றுணிபின் அடிப்படையில் சேவைக்குச் சமுகமளித்தல் வேண்டும்.

05. சூழற்சிச் சேவை முறைக்கு அல்லது சேவைக்கு அழைப்பதற்குப் பின்பற்றப்படும் முறையான வழிமுறைக்கு இணங்க சேவைக்கு அழைக்கப்படாத தினத்திலும், ஒவ்வொரு அரசாங்க உத்தியோகத்தரும் இணைய வழியில் (Online) தமது கடமைகளுக்குரிய பணிகளை மேற்கொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளதுடன் நிறுவனத் தலைவரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்கச் செயற்படுதல் வேண்டும்.

06. மேலே குறிப்பிட்டவாறு அரசாங்க நிறுவனங்களுக்கு உத்தியோகத்தர்களை அழைக்கும் போது கர்ப்பிணி உத்தியோகத்தர்களையும் 01 வயதுக்குக் குறைந்த குழைந்தைகள் உள்ள தாய்மார்களையும் சேவைக்கு அழைக்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மேலும், சந்தேகத்திற்கிடமான நோய் அறிகுறிகளைக் கொண்டுள்ளதாக ஊகிக்கக் கூடியவர்களும் வேறு விசேட காரணங்களின் அடிப்படையில் சேவைக்கு அழைக்கப் பொருத்தமற்றவர் என நியாயமான காரணங்களைச் சமர்ப்பிப்பவர்களையும் சேவைக்கு அழைப்பது அல்லது மாற்று அலுவலக சேவைகளைப் பயன்படுத்தல், வீட்டுக்கு அருகிலுள்ள நிலையமொன்றில் பணியாற்றுவதற்கு வாய்ப்பளித்தல் போன்றவாறு குறித்த ஊழியரின் நலனும் நிறைவேறும் விதத்தில் நெகிழ்ச்சியாகத் தீர்மானம் எடுக்கும் பொறுப்பு ஒவ்வொரு நிறுவனத்தினதும்/ பிரிவினதும் தலைவர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

07. பதவிநிலை மற்றும் ஏனைய உத்தியோகத்தர்கள் சேவைக்குச் சமுகமளிப்பது தொடர்பில் நிறுவனத் தலைவரின் நேரடி மேற்பார்வையின் கீழ் வருகையையும் வெளியேறுவதை பதியும் பதிவேடு ஒன்றை மாத்திரம் பேணி வருவது போதுமானதாகும்.

08. மேலே பந்தி 02 இல் குறிப்பிடப்பட்ட முறைக்குப் புறம்பாக, சுகாதார துறையைச் சார்ந்த உத்தியோகத்தர்களைச் சேவைக்கு அழைக்க வேண்டுமாயின் அது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளரினாலும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினாலும் தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்படும்.

09. உரிய சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் கொவிட் - 19 வைரஸ் தொற்றுவதைத் தவிர்க்கும் விதத்தில் சேவைகளை வழங்கும் பொறுப்பு நிறுவனத் தலைவர்களிடம்

ஒப்படைக்கப்படுவதுடன், கட்டாயமாகச் செய்யப்பட வேண்டிய முகக் கவசம் அணிவது தொடர்பிலும் பின்வரும் விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தி சேவை நிலையங்களில் அனைத்து சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகளையும் கடுமையாகப் பின்பற்றுவதற்கு நிறுவன/பிரிவுத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(அ) நிறுவனத்தின் அனைத்து சேவை நிலையங்களிலும் குறிப்பாகப் பொது இடங்கள், கரும பீடங்கள், உணவு அறை, அலுவலக உணவகங்கள், கழிப்பறைகள் மற்றும் பகிர்ந்து கொள்ளும் இடங்களை நாளாந்தமும் வாராந்தமும் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் பராமரிப்பது அவசியமாகும்.

(ஆ) ஊழியர்களும் சேவைபெறுநர்களும் பின்பற்ற வேண்டிய சுகாதார மற்றும் துப்புரவு வழிகாட்டல்கள் தொடர்பான தகவல்களைக் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

(இ) வழக்கமாக பொது மக்கள் வருகை தருகின்ற அலுவலகங்களில் வளவுக்கு நுழைய முன்னர் உடல் வெப்பநிலையைச் சோதனையிடுதல், கைகளைக் கழுவுதல் போது சுகாதார முறைகளைப் பின்பற்றுவதற்கு வசதிகள் செய்து கொடுப்பது அவசியமாகும்.

(ஈ) சேவையைப் பெறுவதற்கு வரும் பொது மக்கள் மட்டுப்படுத்தப்பட்ட இடங்களில் ஒன்றுகூடுவதனால் ஏற்படும் நெரிசலை முகாமை செய்வதற்குச் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை அடிக்கடி சோதனையிட வேண்டும்.

(உ) இச்செயற்பாடுகளை உரிய முறையில் மேற்கொள்ளப்படுவதை மேற்பார்வை செய்வதற்கு குறிப்பான அதிகாரங்களைக் கொண்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்க வேண்டும்.

10. எவரேனும் அரசாங்க உத்தியோகத்தர்கள் தற்போதைய நிலைமையில் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளின் கீழ் தனிமைப்படுத்தப்பட்டிருந்து, அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டிருப்பது அரசாங்க தனிமைப்படுத்தல் சட்ட திட்டங்களை மீறியமைக்கான தண்டனையாக இல்லாதிருப்பின், அத்தகைய உத்தியோகத்தர்களின் தனிமைப்படுத்தல் காலப் பகுதியை தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 12:9 ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க சம்பளத்துடனான ஒரு காலப்பகுதியாகக் கருதுதல் வேண்டும்.

11. இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர் நடைமுறையிலிருந்த சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க உத்தியோகத்தர்கள் சேவைக்கு அழைக்கப்பட்ட காலப் பகுதியில் அவர்கள் எடுத்த லீவுகளை அவர்களின் சேவையை

நிரந்தரமாக்குதல், தரமுயர்வு வழங்குதல் மற்றும் ஓய்வுபெறச் செய்தல் விடயங்களுக்கு ஏற்புடையதாக்குவது தொடர்பான அறிவுறுத்தல்கள் பின்னர் வெளியிடப்படும்.

12. உத்தியோகத்தர்கள் தடங்கலின்றி சேவைக்குச் சமுகமளிப்பதைச் சாத்தியப்படுத்தும் விதத்தில் உரிய அதிகாரிகளால் சுகாதார வழிகாட்டல்களுக்கு இணங்க பொதுப் போதுப் போக்குவரத்துச் சேவைகள் வழமை போன்று மேற்கொள்ளப்படும்.

13. இதுவரையில் தடுப்பூசி வழங்கப்படாத அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் தடுப்பூசி வழங்கும் செயற்பாட்டை சுகாதார அமைச்சு முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளும்.

14. ஏற்கனவே அவசர மற்றும் அத்தியவசிய சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பணிக் கடமைகளுக்கு இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் தடையாக அமையக் கூடாது. பொது மக்களுக்கு சேவை வழங்குவதை எப்போதும் முன்னுரிமைப் பணியாகக் கருதி தமது தற்றுணிபை நடைமுறைப்படுத்தும் பொறுப்பை நிறைவேற்றுவது நிறுவனத் தலைவரிகளின் கடமையாகும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி

செயலாளர்

பொது சேவை, மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சு